[stamp] ... அலுவலகம்
1 3 JAN 2010
சேப்பாக்கம், சென்னை-5

## சுருக்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – நிலஉரிமைமாற்றம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் கே.அபிஷேகபுரம் கிராமம் புதிய வார்டு, AC, பிளாக் '21' நகரளவு எண் 1ல் மொத்த விஸ்தீரணம் 9483 சதுர அடியில், பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 502 சதுர மீட்டர் நிலத்தினை தற்கால சந்தை மதிப்பின் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய – நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 10 நாள் :12.01.2010

படிக்கப்பட்டது :

1. ஆணையாளர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திருச்சிராப்பள்ளி கடித எண் எப்1/10466/2007 (மையம்) நாள் 04.12.2007 மற்றும் 05.12.2007
2. மாவட்ட ஆட்சித் தலைவர் , திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.ஆ3/30183/2007, நாள் 05.05.2008
3. ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திருச்சிராப்பள்ளி கடித எண். எப்1/10468/2007(மையம்) நாள் 24.02.2009
4. அரசு கடித எண்.5573/மாந2/08–1 நாள் 25.04.2008 & 08.04.2009
5. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.26353/2008/மாந.அ3நாள் 10.07.2009.

---

ஆணை :

ஆணையாளர் திருச்சி மாநகராட்சி அவர்கள் தனது 07.02.2008–ஆம் நாளிட்ட கடிதத்தில் திருச்சி மாநகர எல்லைக்குள் பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான கீழ்கண்ட நிலங்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

| வ.எண் | இடத்தின் விபரம் | வார்டு,பிளாக், நகரளவு எண். | விஸ்தீரணம் சதுர அடி |
|---|---|---|---|
| 1 | கொட்டப்பட்டு கிராமம், அன்பில் நகர் அணுகு பாதை | வார்டு AV, பிளாக் 4, நகரளவு எண்.4பகுதி | 3805.0 |
| 2 | கொட்டப்பட்டு கிராமம், அன்பில் நகர் அணுகு பாதை | வார்டு AV, பிளாக் 4, நகரளவு எண்.4பகுதி | 11,758.0 |

| | | | |
|---|---|---|---|
| 3 | ராக்போர்ட் நகர், கே.சாத்தனூர் மெயின் ரோடு | வார்டு AC, பிளாக்21, நகரளவு எண்.1பகுதி | 5,511.0 |
| 4 | கோ.அபிஷேகபுரம் கிராமம், கிராப்பட்டிகாலனி மெயின்ரோடு | வார்டு AC, பிளாக்19, நகரளவு எண்.1பகுதி | 38,820.0 |

பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான மேற்குறிப்பிட்ட நிலங்கள் யாவும் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருவதால், அவற்றை நில மதிப்பினை செலுத்தி பாதுகாப்புத் துறையிடமிருந்து நிலமாற்ற முறையில் பெறுவது தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் கருத்தினை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் திருச்சி மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், பொதுமக்கள் நடைபாதையாகப் பயன்படுத்தி வரும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் கோ.அபிஷேகபுரம் கிராமம் புதிய வார்டு, AC, பிளாக் 21 , நகரளவு எண் 1ல் மொத்த விஸ்தீரணம் 9483 அடியில் பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 502 சதுர மீட்டர் நிலத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்சியர் ச.மீட்டருக்கு ரூ.3375/- என்ற நிலையில் 502 X ரூ. 3,375 = ரூ.16,94.250/- என தற்கால சந்தை மதிப்பின்படி விலை நிர்ணயம் செய்துள்ளார் என்றும், இந்திய பாதுகாப்புதுறை அமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்களும் 24.10.2006ம் தேதிய தனது கடிதத்தில், மேற்படி நிலத்திற்கான சந்தை மதிப்பினை பாதுகாப்புத்துறைக்கு செலுத்திவிட்டு பொது உபயோகத்திற்காக கிரயம் பெறுவதற்கு ஒப்புதலும் அளித்துள்ளார் என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி, பொருள் தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத்திற்கு விரிவாக பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் தனது 27.11.2007ம் நாளைய 343 எண் கொண்ட தீர்மானத்தில், பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை பொது மக்கள் நலன் கருதி தற்கால சந்தை மதிப்பின்படி அதற்கான தொகையினை செலுத்தி பாதுகாப்புத் துறையிடமிருந்து நிலத்தினை கையகப்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. மேலும், மேற்கண்ட இடம் தொடர்பான வரைபடங்களை ஆய்வு செய்ததில், அந்த இடம் பொது மக்கள் புழக்கத்தில் உள்ள சாலையாகவும், சாலையின் பகுதியாகவும் உள்ளது என்றும் தெரிவித்து, இந்த நிலம் மாநகராட்சிக்கு மிகவும் தேவையான இடமாக உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த நில கிரயத்தை செலுத்தி, பாதுகாப்பு துறையிடமிருந்து இந்த நிலத்தை பெற்றுக்கொள்ள உரிய நிர்வாக அனுமதி அளிக்கும்பொருட்டு திருச்சி மாநகராட்சி ஆணையரின் பிரேரணை மீது உரிய அனுமதி வழங்கும்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில் இக்கருத்துருவை ஆராய்ந்தபின்,அரசு பொதுமக்கள் நடைபாதையாகப் பயன்படுத்தி வரும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் கோ.அபிஷேகபுரம் கிராமம் புதிய வார்டு,AC,பிளாக் 21, நகரளவு எண்1ல் மொத்த விஸ்தீரணம் 9483 அடியில் பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 502 சதுர மீட்டர் நிலத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்சியர் சதுரமீட்டருக்கு ரூ.3375/-என்று நிர்ணயம் செய்துள்ளபடி ரூ.16,94,250/-(502X ரூ.3,375) ஐ

கிரயமாக பாதுகாப்புத் துறைக்குச் செலுத்தி நிலமாற்றம் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு கிரயம் பெற நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை –9
நகல்:
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை –9
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் (ஆநமு2)துறை, சென்னை–9
இ.கோ/உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

சே. பூவதி அம்மாள்
பிரிவு அலுவலர். 12/1/10
அ.இ
12/01/10